ஆகஸ்ட் 2024
மலர் 22, இதழ் 11

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# தேவனைப் போற்றி பாடிய பாடகர்கள்



# தேவனைப் போற்றி பாடிய பாடகர்கள்

*"கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?" (யாத். 15 : 11)*

*"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்!" (லூக். 2 : 14).*

தேவாதி தேவனைப் போற்றி பாடுவது மிகப்பெரிய பாக்கியம். நம் தேவனைப் போற்றி பாடிய பாடகர்கள் விவிலியத்தில் அநேகர் இருக்கிறார்கள். பாடல் பாடியவர்கள் மற்றும் பாடல் இயற்றியவர்கள் யாருமே அதற்குரியவர்களிடம் போய் முறையாக பயிற்சி பெற்றவர்கள் கிடையாது. தங்களுடைய ஒவ்வொரு சூழ்நிலையிலும் கவலையைப் போக்க, சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள, தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்க, கர்த்தரைத் தவிர வேறு தீர்வு கிடையாது என்று உணர்ந்து, தங்களுக்குத் தெரிந்த வாத்தியக் கருவிகளைத் தாங்களே பழகி, தேவனைப் போற்றி பாடினார்கள். பழைய ஏற்பாட்டின் 19-வது புத்தகம் சங்கீதம். பழைய ஏற்பாட்டின் நூல்களின் நடுவாக இருப்பதால் வேதாகமத்தின் இதயம் என்றும் கூறுவர். விவிலியத்தின் (39+27 : 66) மிகப்பெரிய நூல். இதிலே 150 பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்களைத் தாங்களே எழுதி, தாங்களே பாடினார்கள். ஒரு பாடல் எழுதினால், அந்தப் பாடலை இராகத் தலைவனிடம் கொண்டுபோய் அவன் முன் பாடி, ஒப்புதல் (Approval) பெற்ற பின்னரே அது பாடலாக அங்கீகரிக்கப்படும். பாடலை எழுதியவர்கள் சரியான ராகம், தாளம், பாவம் (Bawam) நயத்தோடு எல்லாம் சிறப்பாக இருக்க வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு 150 பாடல்களைப் பாடியவர்கள் பெரிய பெரிய ராஜாக்களும், பெரிய பெரிய தீர்க்கர்களுமே.

மீட்பின் தீர்க்கன் மோசே, தாவீது ராஜா, ஆசா ராஜா, தாவீதின் மகனான சாலொமோன், ஏமான், எத்தன் என்பவர்களால் எழுதி பாடப்பட்டது. தாவீது 74 பாடல்களை எழுதி பாடியுள்ளார். சாலொமோன் ராஜா உன்னதப்பாட்டு என்று விவிலியத்தில் ஒரு நூலாகவே பாடி எழுதி, தன் பெயரை முத்திரை பதித்துக் கொண்டார்.

ஒரு தேசத்தின் ராஜாவுக்கு தன்னுடைய குடிமக்களைக் குறித்த பாரம் எவ்வளவோ இருக்கும். எவ்வளவு வேலை இருந்தாலும், தேவனுக்கென்று நேரத்தை ஒதுக்கிப் பாடல்கள் இயற்றுவது, போற்றிப்பாடுவது, துதிப்பது, வாத்தியக் கருவிகளை மீட்டுவது என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நம்முடைய செயல்கள், சிந்தனைகள், நோக்கங்கள், சொற்கள் ஆகியவை சரியாகவும், நேர்மையாகவும் இருக்குமேயானால், எந்தக் காரியத்திற்கும் கர்த்தருக்கென்று நேரத்தை ஒதுக்காமல் இருக்கவே மாட்டோம்.

ராஜாவாக இருந்தாலும், தீர்க்கனாக இருந்தாலும், சாதாரண ஜனங்களாக இருந்தாலும் தேவனின் சாயலாக படைக்கப்பட்ட நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய ஆத்துமா மிகவும் பெரிது. அந்த ஆத்துமா தேவனுக்கும் பெரியது. அந்த ஆத்துமா கெட்டுப் போய்விடக்கூடாது. இதற்கு காரணம், நாம் இந்த பூமியை விட்டு கடந்து செல்லும் போது நமக்கு ஜீவன் போய்விடும். ஆனால், நமது ஆத்துமா பரலோகத்தில் ஆண்டவர் முன்னால் நிற்கும். ஆகவே, நாம் இந்த பூலோக வாழ்வில் இருக்கும் வரையில் கர்த்தர் பிரியப்படும் காரியங்களில் நம்முடைய ஆத்துமா வாழ வேண்டும். கர்த்தருக்கென்று பிரயோஜனப்படுத்த வேண்டும். விவிலியத்தில் தேவன் மீது பற்று வைத்துப்பாடிய பாடலும், அந்தப் பாடலை யார் பாடியது என்றும் தெரிந்து கொள்வோம்.

1. மோசேயும், இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தரைத் துதித்துப் பாடிய பாடல் : *கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்!? - யாத். 15 : 11.*

2. மோசேயின் சகோதரியான மிரியாம் பாடியது : *கர்த்தரைப் பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் - யாத். 15 : 21.*

3. தேவனின் மக்கள் பாடியது : *ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வா - எண். 21 : 17.*

4. போரில் வெற்றி தந்த தேவனுக்கு நன்றி செலுத்தி நியாயாதிபதிகளான தெபொராளும், பாராக்கும் பாடிய பாடல் : *விழி, விழி தெபொராளே, விழி, விழி பாட்டுப்பாடு; பாராக்கே எழும்பு! நியாயாதி. 5 : 12.*

5. கோலியாத்தை வெற்றி கொண்டு திரும்பி வரும்போது ஸ்திரீகள் ஆடிப்பாடி முறை முறையாகப் பாடின பாட்டு : *சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்ற பாட்டு. 1 சாமுவேல் 18 : 7, 21 : 11.*

6. சிறிய தீர்க்கன்களாகிய செப்பனியா மற்றும் சகரியா பாடியது : *சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப் பாடு. எருசலேம் குமாரத்தியே கெம்பீரி. இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். செப்பனியா 3 : 14, சகரியா 2 : 10, 9 : 9.*

7. சிறைச்சாலையில் இருந்த பவுலும், சீலாவும் பாடியது : *தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள், அவர்கள் பாடிய பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப். 16 : 25.*

8. நட்சத்திரங்கள் பாடியது : *விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவபுத்திரர் எல்லோரும் கெம்பீரித்தார்கள். யோபு 38 : 7.*

9. தேவ தூதர்களின் பாடல் : *உன்னதங்களில் இருக்கிற தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானம், மனிதர் பேரில் பிரியம் உண்டாவதாக. லூக். 2 : 14.*

10. அன்னாள் மற்றும் மரியாள் (இயேசுவின் தாய்) பாடின மகிழ்ச்சியின் பாடல். *என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது..... தாம் அபிஷேகம் பண்ணினவரின் கொம்பை உயரம் பண்ணுவார். 1 சாமு 2 : 1-10. என் ஆத்துமா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது.... தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார். லூக். 1 : 46-55.*

11. எருசலேம் ஜனங்கள் பாடிய இரட்சிப்பின் பாடல் : *தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா. கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா... மத்தேயு 21 : 9.*

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரை மனிதர்கள் மாத்திரம் அல்ல, நட்சத்திரங்கள், தேவ தூதர்கள், பரலோக பரமசேனை எல்லோரும் வாழ்த்தி, போற்றி, துதித்து, நன்றி செலுத்தி பாடியிருக்கிறார்கள். இத்தனைப் பாடல்களில் மூன்று பாடல்களைக் குறித்து பார்ப்போம்.

1. இஸ்ரவேல் ஜனங்களும் மோசேயும் பாடின பாடல்.

2. தேவ தூதர்கள் பாடின பாடல்.

3. சிறைச்சாலையிலிருந்தவர்கள் பாடின பாடல்.

## *1. இஸ்ரவேல் ஜனங்களும், மோசேயும் பாடின பாடல்.*

*''கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?...'' யாத். 15 : 11*

அம்ராம், யோகெபேத் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தவர் மோசே. பார்வோனின் ராஜகுமாரத்தி நதியில் வந்த நாணல் பெட்டியிலிருந்து மோசேயை எடுத்தபடியால், மோசே என்பதற்கு *நீரிலிருந்து எடுக்கப்பட்டவர்* என்று அர்த்தமானது.

அரண்மனை, வனாந்தரம், மீட்பின் பயணம் என்று மோசேயின் வாழ்க்கை பிரிக்கப்படுகிறது. அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி,

*"...உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நாலூறு வருஷம் (400 years) உபத்திரவப்படுவார்கள் என்றும் நீ நிச்சயமாய் அறியக்கடவாய்''* (ஆதி 15 : 13) என்று கூறினார். எபிரேயர்கள் பிற்காலத்தில் எகிப்திலே பட்ட கஷ்டத்தை ஆபிரகாம் பரலோகத்திலிருந்து பார்த்திருப்பார். தேவன் சொன்ன வார்த்தையை நினைவு கூர்ந்திருப்பார்.

ஆனால், அப்படி கஷ்டப்பட்ட மக்களை தேவன் தம்முடைய ஜனம் என்று கூறுகிறார். அந்த ஜனங்களின் கூக்குரலானது தேவனுடைய செவிக்கு எட்டினது. ஆதியாகமம் 15-ஆம் அதிகாரத்தின் இறுதியில் ஆபிரகாமிடம் சொன்னபடி, கானான் தேசத்தை அவர்களுக்கு கொடுப்பதற்காக எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்காக தேவன் மோசேயை அழைத்தார். வணங்காக் கழுத்துள்ள ஜனங்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவர, பார்வோனின் கடின இருதயத்தை நன்கு அறிந்த மோசே, தனக்கு தேவன் எப்படியெல்லாம் கற்பித்தாரோ, அதன்படியெல்லாம் நடந்து 10 வாதைகள் மூலமாக எத்தனையோ படிப்பினைகளை பார்வோனுக்கு கற்பித்து, இறுதியில் தேவனின் கரம் பிடித்து அழைத்து வந்தார் மோசே.

*<u>சிவந்த சமுத்திரத்தைக் கடக்க வேண்டிய சூழ்நிலை :</u>*

*"...கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ் காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று'' (யாத். 14 : 21).*

***"The Lord caused the sea to go back by a strong east wind all that night and made the sea dry land, and the waters were divided" (Exodus 14 : 21).***

இஸ்ரவேல் மக்கள் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றி முப்பது (430 years) வருடங்கள். எகிப்தை விட்டு வெளியே வரும்போது பெண்கள், முதியவர்கள், வாலிபர்கள் மற்றும் திரளான கால்நடைகளோடு புறப்பட்டனர். ஜனங்களும் இருபது முதல் அறுபது லட்சம் பேர் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மோசே தன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டினபோது *கர்த்தர் செய்த மகா பெரிய அற்புதம் இது*. தேவன் தமது வல்லமையையும், தமது மக்களை தாம் எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும் கண்கூடாகக் காட்டும் விதத்தில் செய்த அற்புதம். மேலும், தண்ணீர் ஒதுங்கும்படி செய்யும் அளவிற்கு *வேகமாக வீசிய காற்றில் இஸ்ரவேலில் யாரும் தூக்கிச் செல்லப்படாததும் அதிசயமே!!*

செங்கடல் இரண்டாகப் பிரிந்த சம்பவம் நடந்தது இரவு நேரம். அக்கினி ஸ்தம்பத்தின் துணை கொண்டு *விசுவாசத்தோடு* இருபுறமும் தண்ணீர் பனிக்கட்டிகளாக உயர்ந்து மதில் போல் இருக்க வெட்டாந்தரையில் நடந்தார்கள். எவ்வளவு மணி நேரமாயிருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. எல்லோரும் அக்கரையில் சேர்ந்த போது, வல்லமையும், அற்புதமும் அதிசயமுமான தேவனை, மோசேயும், இஸ்ரவேல் ஜனங்களும் புகழ்ந்து பாடினார்கள்... *உமக்கு ஒப்பானவர் யார்?*

இந்தப் பாடல் தான் உலக வரலாற்றில் முதன் முதலில் எழுத்துருவில் குறித்து வைக்கப்பட்ட பாடலாகும். தேவனைத் துதித்துப் பாடுவதும், இசைக் கருவிகளோடு பாடுவதும் மிகச் சிறந்தது. கர்த்தரைப் பற்றிய மூன்று மகத்தான உண்மைகள் இந்தப் பாடலில் காணப்படுகிறது. *யாத்திராகமம் மீட்பின் நூலாகும்*. இதில் மீட்பர் பற்றிய கருத்துக்களை நாம் காணலாம்.

*<u>மீட்பு தேவனிடத்திலிருந்து கிடைக்கிறது.</u>*

*"...உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி, உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான்...'' (யாத். 6 : 7).*

நம்முடைய ஆண்டவர் தம் சாயலில் படைக்கப்பட்ட மக்களில் ஒருவரும் கெட்டுப்போய் விடக்கூடாது. தவறான பாதையில் சென்று விடக்கூடாது என்பதற்காக தம்முடைய ஒரே பேரானக் குமாரனை பாலகனாய் அனுப்பி, ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு (மீட்பு) இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

*மீட்பு இரத்தத்தினால் உண்டாகிறது.*

*''அந்த ஆட்டுக் குட்டியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கவும்'' (யாத். 12 : 7).*

பஸ்காவை எப்படி ஆசாரிக்க வேண்டுமென்று கர்த்தர் மோசே மற்றும் ஆரோனிடம் கூறுகிறார். அந்த வீடுகளில் இருக்கும் இரத்தம் உங்களுக்காக அடையாளமாயிருக்கும். அந்த இரத்தத்தை கர்த்தர் கண்டு கடந்து போவார். எகிப்து தேசத்தை கர்த்தர் அழிக்கும் போது, அந்த வாதை இரத்தம் தெளிக்கப்பட்ட இஸ்ரவேல் வீட்டாருக்கு வராமலிருக்கும். *''தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'' (கொலோ. 1:14).*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய மீட்புக்காக / இரட்சிப்புக்காக கல்வாரி வரை சென்றார். நம்முடைய பாவங்களுக்காக சிலுவையைச் சுமந்தார். நம்முடைய மீட்புக்காக இரத்தம் சிந்தினார். ஐந்து காயங்கள் அடைந்தார். உயிர்த்தெழுந்து ஜீவனோடு இருக்கிறார். இஸ்ரவேல் மக்களை நாற்பது வருடங்களாக பாதுகாத்து, வழிநடத்தி, உணவு, தண்ணீர் மற்றும் காடைகளைக் கொடுத்து வழிநடத்திய தேவன் நம் தேவைகளையும் ஏற்ற வேளையில் சந்திப்பார்.

*2. தேவ தூதர்கள் பாடின பாடல் :*

*''உன்னதங்களில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்'' (லூக். 2 : 14).*

***Glory to God in the highest and on earth Peace, Good will toward men. Luke. 2 : 14.***

வேதாகமத்திலே தேவனைத் துதித்து எத்தனையோ பாடல்களை பாடகர்கள் பாடினாலும், மனுக்குலத்தின் மீட்புக்காக நம் ஆண்டவராகிய இயேசு பாலகனாகப் பிறந்த போது பரலோகத்திலுள்ள பரமசேனையின் திரள் ஒன்றுகூடி, மேய்ப்பர்கள் முன்னால் இரவு நேரத்தில் மகிமையின் ஒளியில் பாடின பாட்டு தான் லூக். 2 : 14 வசனத்திலே பாடப்பட்ட பாடல். இந்தப் பாடலின் ஒத்து வாக்கியமாக இயேசுவானவர் எருசலேமுக்கு பவனி வந்த போது மக்கள் பாடின பாட்டு. லூக். 19 : 38.

*''கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர். பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக, என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்.''*

தேவ தூதர்களின் பாடலைத் தொடர்ந்து இன்று வரை கணக்கற்ற பாடல்கள் கிறிஸ்துவின் பிறப்புச் செய்தியை அறிவிப்பதாக உலகின் பல மொழிகளில் பாடப்பட்டு வருகின்றன. *அல்பாவும், ஓமெகாவும் முந்தினவரும், பிந்தினவரு-மாயிருக்கிறவர்* (வெளி. 1 : 11) அரசர்களின் அரசர், கர்த்தாதி கர்த்தர் முன்னணையில் (தொழுவத்தில்) பிறந்து தம்மை இவ்வளவு தூரம் தாழ்த்தியது போல் உலகில் வேறு யாரைப் பற்றியும் கேள்விப்பட்டது கிடையாது.

*மேய்ப்பர்களைப் பற்றியது :*

அக்காலத்தில் யூத மக்களிடையே மேய்ப்பர்கள் ஒரு தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டனர். செல்வந்தர்களின் ஆடுமாடுகளை மேய்க்கும்

கூலிக்காரர்களாயிருந்தனர். இரவு பகலாக ஆடுகளை கண்காணித்தபடியாய் தேவனுடைய ஆராதனைகளில் கலந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தார்கள். சட்ட திட்டங்கள் ஒழுங்காக கடைபிடிக்கப்படாததால் மேய்ப்பர்களின் சாட்சி, யூத நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆனால், கிறிஸ்துவின் பிறப்பைக் கூறும் முதல் சாட்சிகளாக நம் தேவன் மேய்ப்பர்களைத்தான் தேர்ந்தெடுத்து பெருமைப்படுத்தினார்.

கிறிஸ்துவின் பிறப்பின் பாடலில் உள்ள மூன்று முக்கியமான வார்த்தைகள். மகிமை (Glory), சமாதானம் (Peace), பிரியம் (Love & Affection).

*மகிமை :* *அப்பொழுது மோசே : உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான் (யாத். 33 : 18).*

ஆண்டவருடைய முகம் மோசேக்கு நன்கு தெரியும். ஆனால், முழு மகிமையில் தேவனைக் கண்டுகொள்ள விரும்பினார். அது கிடைக்கவில்லை. ஆனால், கர்த்தருடைய மகிமை 40 வருடங்களாக இஸ்ரவேலின் சேனைக்கு முன்னால், மோசேக்கு முன்னால் வழி நடத்தியது.

சங். 24 : 7-10 : தாவீது ராஜாவால் எழுதப்பட்டப் பாடல். தாவீது மகிமையைக் குறித்து என்ன கூறுகிறார். நமது தேவனை *மகிமையின் ராஜா* என்று ஐந்து முறை (5 times) பாடுகிறார். இருளிலே நடந்தவர்கள் பெரிய ஒளியை / பிரகாசத்தை / வெளிச்சத்தைக் கண்டார்கள் என்று வாசிப்பதில் மகிமை என்ற பதம் தெளிவாகத் தெரிகிறது.

*கடந்த காலத்தில் :* என் வாசல்கள் உயர்ந்தன. அநாதி கதவுகள் திறந்தன. கர்த்தராகிய கிறிஸ்து உலகத்திற்கு இரட்சகராக வந்தார்.

*நிகழ்காலத்தில் :* கதவுகளே திறவுங்கள் என்று இன்று தட்டிக் கொண்டிருக்கிறார். திறக்கின்ற கதவுகள் வழியாக ஆண்டவர் உள்ளே வருகிறார். கதவைத் தட்டுகிறவர் யார்? சேனைகளின் கர்த்தர் கதவை உடைத்துக் கொண்டு வராமல் அன்பாகத் தட்டுகிறார். நம் இதயத்தை / உள்ளத்தை / வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக திறந்து மகிமையின் ராஜாவை உள்ளே அழைப்போம்.

*வருங்காலத்தில் :* மகிமை என்ற வார்த்தை வேதாகமத்தில் எண்ணமுடியாத அளவில் வசனங்களில் உள்ளது. நிதானமாகப் படித்து மனதில் குறித்துக் கொள்வோமாக.

இனி ஒருநாள், வாசல்கள் எல்லாம் உயரும். அநாதி கதவுகள் திறக்கும். மகிமையின் ராஜா இரண்டாவது தடவையாக பரலோக சேனையுடன் ஆரவாரத்தோடு மகிமையோடு வரப்போகிறார். இல்லத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் குடும்ப ஜெபம், கர்த்தருடைய பாடல்கள், மற்றவர்களுக்கு சாட்சியுள்ள வாழ்க்கையை வாழ்ந்து, கர்த்தர் வரும்போது நாமும் இணைந்து கொள்வோம்.

*சமாதானம் :* மிகவும் ஒரு கடினமான காரியம். யாவரோடும் சமாதானமாக இருப்பது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் *சீஷர்களிடம் பேசின முதல் வார்த்தை, 'உங்களுக்குச் சமாதானம்'* என்றார் - லூக். 24 : 36. ஆவியின் கனிகளில் நான்காவது கனி *சமாதானம்* - கலா. 5 : 22. தேவனுடைய நாமம் *சமாதானப் பிரபு* என்னப்படும் - ஏசா. 9 : 6. தீமோத்தேயுவின் சகோதரன் தன்னுடைய எபிரேயர் புத்தகத்தில் யாவரோடும் இந்த பூமியிலே *சமாதானமாயி*ருக்க வேண்டும் என்று எபி. 12 : 14-ல் எழுதுகிறார். ஒருவராலும் கடைபிடிக்க முடியாதது (Implement பண்ண).

யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுடன் சமாதானமாயிருக்க ஏசாவை நோக்கிச் சென்றார். சமாதானமானார்.

யோசேப்பு தன் சகோதரர்களுடன் சமாதானமாயிருக்க ஆறுதலான இன் சொற்களால் பேசி, உளமாற மன்னித்து வாழ்ந்தார்.

இயேசுவே *சமாதானகாரணர்* - மீகா. 5 : 5. பூமியிலே சமாதானம் என்று தேவதூதர்கள் பாடினார்கள். நம்மால் முடிந்த அளவு யாவரோடும் சமாதானமாயிருக்க முயற்சிப்போம். காரணம்,

உள்ளத்தில் சமாதானம் இல்லாவிட்டால், குடும்பத்தில் சமாதானம் இல்லாவிட்டால் மனநிலை பாதிக்கப்படும். கவனமாயிருப்போமாக!

*<u>மனிதர்மேல் பிரியம் :</u>* பாவிகளை இரட்சிக்கவே இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். பாவிகளான நம் மேல் கொண்ட அன்பு மற்றும் பிரியத்தின் நிமித்தமாக பாலகனாக வந்தார். நாம் ஆண்டவருக்குப் பிரியமாக நடந்தால், தேவனும் நம்மேல் அதிக பிரியமாய் இருப்பார். மேய்ப்பர்கள் தங்கள் கடமைகளில் கருத்தாயிருந்தனர். இரட்சகரைப் பார்க்க ஆவல் கொண்டார்கள். முடிவெடுத்து உடனடியாக செயல்பட்டார்கள். முதல் சாட்சியாக நின்றார்கள். நாமும் ஜெபித்துத் தேடி கர்த்தரை கண்டு கொள்வோம்.

*<u>3. சிறைச்சாலையிலிருந்தவர்கள் பாடின பாட்டு :</u>*

மகர யாழை மீட்டும் போது தேவன் இறங்கினார். மன்னன் தாவீது பாடும் போது தேவன் உருகினார். சவுலைப் பிடித்த அசுத்த ஆவி தாவீது பாடிட, அகன்றது. *பவுலும், சீலாவும் பாடும் போது, சிறை விலங்கு உடைந்தது.*

இன்பமயமாய் ஆன தேவன் இனிய இசையில் மயங்குவார். பவுல் தான் செல்லும் ஊர்களில் உள்ள யூதருடைய ஜெப ஆலயங்களுக்குச் சென்று இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பேசுவதை வழக்கமாய் வைத்திருந்தார். அதினால் சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின. அப்படியே பவுலும், சீலாவும் துரோவாவுக்கு வந்தபோது, அன்று இரவு ஒரு தரிசனத்தை பவுல் கண்டார்.

மக்கெதோனியா நாட்டைச் சேர்ந்த ஒருவன் வந்து நின்று; *''நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை (பவுலை) வேண்டிக் கொண்டதாக இருந்தது'' (அப். 16 : 9).*

தரிசனங்கள் மூலம் தேவன் வழிகாட்டுவது வேதத்தின் பல பகுதிகளில் கூறப்பட்டுள்ளன. எந்த ஒரு தரிசனத்தைக் கண்டாலும் நன்றாக ஜெபித்து ஆவியானவரிடம் விளக்கமும் வழி நடத்துதலும் பெற்று செயல்பட வேண்டும்.

ஐரோப்பா கண்டத்தின் முதல் விசுவாசி, ஆசியாவைச் சேர்ந்த தியத்தீரா என்னும் இடத்தில் வாழ்ந்தவள் லீதியாள் (Lydia). இரத்தாம்பரம் என்பது ஊதா அல்லது கருஞ்சிவப்பு நிறமாகும். இந்த நிறத்தில் உள்ள ஆடைகளை செல்வந்தர்களும் உயர் அதிகாரிகளும் மட்டுமே அணிவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆடைகளை விற்பவர்களும் பெருஞ் செல்வந்தர்களாகக் காணப்பட்டனர். லீதியாள் வருந்திக் கேட்டுக் கொண்டபடியால், அவள் வீட்டிற்கு ஜெபம் பண்ணப் போனார்கள்.

போகும் வழியில் குறி சொல்ல ஏவுகிற அசுத்த ஆவியைப் பிடித்திருந்த ஒருபெண் பவுலுக்கு எதிர்ப்பட்டாள். அநேக நாள் பவுலைத் தொடர்ந்து வந்து சத்தமிட்டபடியால் பவுல் கோபமடைந்து அந்தப் பெண்ணைப் பார்த்து, "அசுத்த ஆவியே இந்தப் பெண்ணை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்றான். உடனே அந்த அசுத்த ஆவி அந்தப் பெண்ணை விட்டு புறப்பட்டுப் போனது.

இந்தப் பெண்ணின் வேலை என்னவென்றால், இப்படிப்பட்ட அசுத்த ஆவியின் மூலமாக எதிர்கால நிகழ்வுகளை தீர்க்க தரிசனம் கூறுவதுபோல் போலியாக யூகித்துச் சொல்வது. இதை நம்பி வாழ்ந்த அநேகர் உண்டு. இப்போது அந்த பெண்ணிடமிருந்த அசுத்த ஆவியை பவுல் நீக்கிப் போட்டபடியால் அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்தின் நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு பவுலையும், சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்தனர்.

*<u>பவுலுக்கும், சீலாவுக்கும் நடந்தது என்ன?</u>*

*''ரோமராகிய நாம் ஏற்றுக் கொள்ளவும், அனுசரிக்கவும் தகாதமுறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது*

*ஜனங்கள் கூட்டங்கூடி, கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள்...'' (அப். 16 : 21, 22).*

ஜனங்கள் கலகம் பண்ணி பவுலும், சீலாவும் போட்டிருந்த வஸ்திரங்களைக் கிழித்து அநேக அடிகள் அடித்து, சிறைச்சாலையில் வைத்து பத்திரமாய் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கு கட்டளையிட்டனர். சிறைக்காவலன் அவர்களுடைய கால்களைத் தொழு மரத்தில் மாட்டி வைத்தான்.

நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் *துதித்துப் பாடினார்கள்.* அவர்கள் பாடின பாடலை காவலர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். திடீரென சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக *பூமி மிகவும் அதிர்ந்தது.* உடனே கதவுகள் எல்லாம் திறவுண்டது. இரண்டு பேருடைய *கட்டுகளும் கழன்று போயிற்று.*

*<u>சிறைச்சாலைக்காரனின் நிலைமை :</u>*

இரவு விடிந்ததும் சிறைச்சாலைக் காவல்காரன் நேற்று இரவு என்ன நடந்தது என்று தெரியாமல் பார்க்கிறான். சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருப்பதைப் பார்க்கிறான். சிறையின் உள்ளேயிருந்தவர் எல்லோரும் தப்பி ஓடிவிட்டார்கள் என்று எண்ணி, ரோம அதிகாரிகளுக்கு பயந்து பட்டயத்தால் தன்னைத் தானே கொலை செய்து கொள்ளப் பார்த்தான். அதைக் கண்ட பவுல், *மிகுந்த சத்தமிட்டு,* சிறைக்காவலனை நோக்கி : உனக்கு கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே. நாங்கள் இங்கேதான் இருக்கிறோம் என்று கூறினான். காவலன் தீபங்களைக் கொண்டு வந்து உள்ளே போய் பவுல் சீலா இருவருக்கும் முன்பாக விழுந்து வணங்கி, ஒரு கேள்வியை பவுலிடம் கேட்கிறான்.

*<u>இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?</u>*

*''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்''* - என்று சொல்லி அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். அவனும் அவன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவன் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் சாப்பாடு கொடுத்து மனமகிழ்ச்சியாயிருந்தான்.

தேவனுடைய ஊழியக்காரர்கள் ரோமராயிருக்கிறார்களென்று கேட்ட பொழுது, அதிகாரிகள் பயந்து வந்து அவர்களோடு பேசி பட்டணத்தைவிட்டு புறப்பட்டுப் போனார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியத்தில் பட்டபாடு இவ்வளவு என்று எடுத்துச் சொல்ல முடியாது. பவுலும், சீலாவும் உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்று அழைக்கப்பட்டனர். நம்முடைய ஊழியத்தில் யாராவது நம்மைப் பார்த்து அப்படி அழைக்கிறார்களா? அப்படியில்லாவிட்டால் நமது நற்செய்தி ஊழியத்தில் நம் உள்ளமானது சரியாக ஈடுபாடு கொள்ளவில்லை என்று தான் அர்த்தம். ஆகவே, மனோவாஞ்சையாக வேத வாக்கியத்தை திறந்த மனதுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேத வசனங்களை வாசிக்க, தியானிக்க நேரத்தை செலவிட வேண்டும். தானியேலைப் போல, தாவீது ராஜாவைப் போல் மூன்று நேரமும் தேவனை ஆராதிக்க, துதிக்க, போற்றிப்பாட நேரத்தை ஒதுக்கி வாழ்வோமாக.

இஸ்ரவேல் ஜனங்கள் எண்ணிக்கைக்கு அடங்காததும், இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாயிருந்தாலும், தேவன் தனக்கென்று சொந்தமாக தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டார். வணங்காக் கழுத்துள்ள ஜனம், கீழ்ப்படியாத ஜனம், இன்னும் எத்தனையோ குறைபாடுகள் தேவனுடைய மக்களிடம் காணப்பட்டாலும், ஒவ்வொரு முறையும் மன்னித்து, மன்னித்து நாற்பது வருடங்களாக முன் நின்று நடத்தி, முதல் முற்பிதாவுக்கு கொடுத்த வாக்குறுதியை (ஆதி. 15 : 21) நிறைவேற்றினார். நம்மையும் கூட ஏதோ ஒரு காரணத்தினால் தான் கிருபையாய் ஒவ்வொரு நிமிடத்தையும்

கடக்கப்பண்ணுகிறார். நாமும் கூட தேவனுக்குப் பிரியமான துதி செலுத்துவதும், நன்றி செலுத்துவதும், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதும், கறையில்லாத கரங்களாக இருப்பதும், ஏழைகளுக்கு உதவி செய்யும் மனப்பான்மையைக் கடைபிடிப்பதும், தேவனின் மந்தையில் ஆடுகளை சேர்ப்பது போன்ற சிறப்பான காரியங்களைச் செய்து அன்பு செலுத்தினால், தேவனும் நம்மீது அன்பு செலுத்தி, நாம் கேட்கும் அனைத்து ஜெபத்திற்கும் ஒரு அங்கீகாரம் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. தினமும் கீர்த்தனை, ஞானப்பாட்டுகளினால் பாடி, ஆண்டவர் உள்ளத்தில் இடம் பிடிப்போமாக!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு தாழ்மையின் பிறப்பிடம். உலகத்தில் எத்தனையோ குழந்தைகள் பிறந்திருக்கிறது. எந்த ஒரு குழந்தைக்கும் பரமசேனையின் திரள் (கூட்டம்) பிறந்திருக்கும் குழந்தையைக் குறித்து பாடினதாக வரலாறு கிடையாது. மகிமை, சமாதானம், நம்மீது பிரியம் கொண்டு பிறந்த ஒரே குழந்தை தேவனுடைய ஒரே பேரானக் குமாரன் இயேசு கிறிஸ்து மட்டுமே. அப்பேர்ப்பட்ட கிறிஸ்துவின் சாயலில் படைக்கப்பட்ட நாமும் தாழ்மையான வார்த்தையைப் பேசுவோம். தாழ்மையை ஆடையாக அணிவோம். தாழ்மையை ஒளியைப்போல் பிரகாசிக்கச் செய்வோம்.

அப். பவுல் பதிமூன்று நிரூபங்களை (ரோமர் – பிலமோன்) நமக்காக எழுதினார். ரோமர்களால் அதிகம் அடிபட்டவர். அதிகமாய்க் காவலில் வைக்கப்பட்டவர். அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவர் (2 கொரி 11 : 23-28). யூதரல்லாதோர்க்கு அப்போஸ்தலராக இருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர். சிறைச்சாலையில் கைதியாக சீலாவுடன் இருந்த போது, கர்த்தரைத் துதித்துப் பாடியவர். அந்தப் பாடலின் மூலமாக பூமி அதிர்ந்து, கட்டுகள் கழன்றனவென்றால் அவர்கள் பாடிய பாடல் தேவனுடைய செவியில் எட்டியது. மிகப்பெரும் இரத்த சாட்சியாக விளங்கியவர். அதிகமான சபைகளை நிறுவி, புறஜாதியாரை பிரசங்கம், நற்செய்தி மூலமாக தேவனின் மந்தையில் சேர்த்தவர். நல்ல போராட்டத்தைப் போராடி ஜீவ கிரீடத்தை பெற்றவர். பவுல் எழுதிய மடல்களைப் படித்து நாம் மனமாறுவோம்.

மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் கூட இசைக்கு மயங்குகிறது. நாமும் தேவனைப் போற்றி பாடுவோமானால், அதற்கான ஆசீர்வாதத்தை நிச்சயம் தேவன் நமக்குத் தருவார்.

*போற்றி துதிப்போம்*
*எம் தேவ தேவனை*
*புதிய இதயமுடனே;*
*நேற்றும் இன்றும் என்றும் மாறா*
*இயேசுவை நாம் என்றும்*
*பாடித் துதிப்போம்!*

*"God Bless You"*

*– சகோதரி. பேர்ல் குயிலிராஜா*

# உலகச் செய்திகள்

★ சென்னை மாநகராட்சியின் முன்னாள் நகரச் சுகாதார அலுவலராகவும், எளிய மக்களுக்கு 1 ரூபாய் கட்டணத்தில் மருத்துவ சேவை புரிந்த மருத்துவர் பெ. குகானந்தம் உடல்நலக் குறைவால் ஜூன் 24 அன்று காலமானார்.

★ திருப்பூர் அருகில் உள்ள பொன்னே கவுண்டன்புதூர் கிராமத்தில் தொழிலைத் தொடங்கி, உலகம் முழுதும் வாடிக்கையாளர்களைப் பெற்றிருக்கும் இருபது வயதே ஆன திவ்யபாரதி, உழமகள் (Instagram@uzhamagal) என்கிற இன்ஸ்டா ID மூலம் துணிகளை விற்கிறார்.

★ அமெரிக்க ராணுவ ரகசியங்களை உளவு பார்த்த வழக்கில் விடுவிக்கப்பட்டதையடுத்து, விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தனி விமானம் மூலம் ஆஸ்திரேலியா திரும்பினார். (தொடர்ச்சி : 15-ஆம் பக்கம்)

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''... இதோ சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்...'' 1 இரா. 18 : 44.*

ஆகாப் இராஜாவின் நாட்களில் இஸ்ரவேலில் பாவங்கள் பெருகிற்று. ஜனங்கள் பாகாலை வழிபட்டார்கள். விக்கிரக ஆராதனை பெருகியிருந்தது. அதினிமித்தம் தேசத்தில் மூன்று வருடம் மழை பெய்யாமலிருக்கும் என்று எலியாவைக் கொண்டு ஆகாபிடம் கர்த்தர் சொன்னார். தேசத்திலே பஞ்சம் கொடியதாயிருந்தது. மூன்று வருடங்களுக்கு பிறகு எலியாவிடம் கர்த்தர், ''தேசத்திலே மழையை வரப்பண்ணுவேன், நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி" என்றார். எலியா ஆகாபிடம் கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகால் தீர்க்கதரிசிகளையும் கூடிவரும்படி சொன்னான். அவர்கள் எல்லாரும் கூடி வந்த பொழுது, எலியா அவர்களை நோக்கி ''நானும், பாகால் தீர்க்கதரிசிகளும் தனித்தனியாக பலி செலுத்துவோம். யாருடைய பலிக்கு அக்னியால் உத்தரவு அருளப்படுகிறதோ அந்த தெய்வமே உண்மையான தெய்வம்,'' என்றான். பாகால் தீர்க்கர்கள் சாயங்கால மட்டும் பாகாலை நோக்கி கூப்பிட்டார்கள். உத்தரவு அருளப்படவில்லை. எலியா கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டவுடன், கர்த்தரிடத்திலிருந்த அக்கினி இறங்கி, சர்வாங்க தகனபலியைப் பட்சித்து, பின்பு, எலியா பாகால் தீர்க்கதரிசிகளை கீசோன் ஆற்றங்கரையிலே வெட்டிப் போட்டான். எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தன் முகம் முழங்காலில்பட குனிந்து ஜெபித்தான். தன் ஊழியக்காரனிடம் சமுத்திரமுகமாய் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான். நீ இன்னும் ஏழுதரம் போய் பார் என்றான். அவனுடைய ஊழியக்காரன் ஏழாந்தரம் பார்த்து "இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது" என்றான். சிறிது நேரத்தில் வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்துப் பெருமழை உண்டாயிற்று.

அந்த உள்ளங்கையளவு மேகம்தான் பெருமழை பெய்து தேசத்தின் பஞ்சத்தை போக்கிற்று. பலிக்காக கர்த்தரை நோக்கி ஜெபித்தவுடனே அக்கினியினால் உத்தரவு கொடுத்த கர்த்தர், மழைக்காக ஜெபித்த பொழுது உடனே பதில் கொடுக்கவில்லை. ஏழாந்தரம்தான் அடையாளம் காண்பித்தார். நம்முடைய சில ஜெபங்களுக்கு உடனே கிரியை செய்யும் கர்த்தர், சில விண்ணப்பங்களுக்கு தாமதமாகத்தான் பதில் சொல்வார். தேசத்தின் எழுப்புதலுக்காக அநேகமாய் ஜெபம் ஏறெடுத்தாலும் பெரிய அளவில் எழுப்புதல் இல்லை. ஆனாலும் இது முடிவில்லை, தொடர்ந்து எலியாவைப் போல் மனந்தளராமல் ஜெபித்தால், கையளவு மேகமாய் சிறிய அளவில் உள்ள தேவ ஜனங்களான நாம் பெருமழையைப் போன்ற ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகி தேசத்தை நிரப்புவோம்.

பஞ்ச காலத்தில் எலியாவை கர்த்தர் சாறிபாத் விதவையின் வீட்டில் வைத்து ஏறக்குறைய 3 வருட காலம் போஷித்தார். அந்த விதவையிடம் ஒரு பிடி மாவும் கொஞ்சம் எண்ணெய்யும் மாத்திரமே இருந்தது. ஆனால் அந்த கொஞ்ச மாவும், எண்ணெய்யும் பஞ்ச காலம் முடியும் வரை குறையவேயில்லை.

ஆபிரகாமுக்கு கர்த்தர் ''*உன் சந்ததியை*

*வானத்தின் நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணுவேன்''* என்று வாக்குதத்தம் கொடுத்தார். ஆனால், ஈசாக்கை மாத்திரமே கொடுத்தார். பின்பு ஈசாக்கின் மூலமாக யாக்கோபும் ஏசாவும் வந்தார்கள். யாக்கோபை இஸ்ரவேலாய் மாற்றி 12 குமாரர்களை கொடுத்து அவர்களை பெரிய சந்ததியாக்கினார். அந்த சந்ததியில் இயேசு கிறிஸ்துவைப் பிறக்கச் செய்தார். அவர் மூலமாய் விசுவாசிகளான நம்மையும் அவருடைய சந்ததியாய் மாற்றினார்.

*அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?... (சக. 4 : 10).* நம்முடைய ஆவிக்குரிய காரியத்திலும், இந்த பூமிக்குரிய காரியத்திலும் சிலவற்றின் ஆரம்பம் அற்பமாயிருக்கும். ஆனால், கர்த்தர் அதின் முடிவை சம்பூரணமாய் மாற்றுவார். ஆகவே, ஆரம்ப சூழ்நிலையைக் கண்டு துவண்டு போகாமல், கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து வாழுவோம்.

கடந்த 30.06.2024 அன்று கோவை கணியூரிலுள்ள சி.எஸ்.ஐ. ஆலயத்திலும், சின்னமோப்பேரிபாளையத்திலுள்ள சி.எஸ்.ஐ. ஆலயத்திலும் காலை ஆராதனைகளில் திரு. S. ராஜசேகரன் அவர்கள் தேவ செய்தியளிக்க, திரு. ஜாண் சேகர் அவர்கள் IBT ஊழிய அறிமுகம் மற்றும் விளக்கமளித்தார். சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்து, நல்ல வரவேற்பையும் கொடுத்த சபை ஆயர், கமிட்டி செயலர், பொருளர் மற்றும் சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

மே மாதம் நடைபெற்ற லோகோஸ் முகாமில் வெளியிடப்பட்ட படுகா வேதாகமங்களை படுகா மக்கள் மிகவும் ஆர்வத்துடன் வாங்கியுள்ளார்கள். கிடைக்காதவர்கள் தங்களுக்கும் விரைவில் கொடுக்கும்படி கேட்டு வருகிறார்கள். ஆகவே, அதிகமான எண்ணிக்கையில் மீண்டும் அச்சிட வேண்டியுள்ளது. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள். இதேபோல் சம்பல்புரி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டு முடிந்து, மீண்டும் அச்சிட BSI-க்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. முண்டாரி, போவி மொழிகளிலுள்ள புதிய ஏற்பாடு, விநியோகம் நடந்து வருகிறது. இருளா வெள்ளியங்காடு மொழியில் வெளியிடப்பட்ட சங்கீதம், நீதிமொழிகள் புத்தகம் இம்மொழி பேசும் மக்களுக்கு விநியோகம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆர்வத்தோடு வாங்கி தினமும் வாசித்துப் பயன்பெற ஆவியானவர் கிரியை செய்ய வேண்டும்.

IBT-இன் மொழிபெயர்ப்புப் பணி, மிஷனெரிப் பணி, இலக்கியப் பணி மற்றும் சமூகப் பணிகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் வாசகர்கள் அனைவரையும் எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காத்து, வழி நடத்த ஜெபியுங்கள்.

"ஷாலோம்"

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
***K. ஜெய்சிங்***

# பணித்தளச் செய்திகள்

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. கடா மண்டல்*
*மொழி : சோரா*
*பணித்தளம் : பரலக்காமண்டி (ஒடிஷா)*

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!

மொழிபெயர்ப்புப் பணியில் லோகோஸ் முகாமில் வெளியிடுவதற்காக சோரா மொழியிலும் சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம் முடிக்கப்பட்டன. மே மாதம் 10, 11, 12 தேதிகளில் தமிழ்நாடு, கோவை மாவட்டத்தில் ஆனைகட்டியில் நடைபெற்ற IBT லோகோஸ் முகாமிற்கு IBT மொழிபெயர்ப்பாளர்களும் அழைக்கப்பட்டார்கள். நானும் சென்று பங்கு பெற்றேன். மூன்று நாட்களில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் உற்சாக மூட்டுவதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது.

மத்தேயு நற்செய்தி சரிபார்ப்பு செய்யப்பட்டது. மிஷனெரிப் பணிக்காக தர்மங்குடா, பர்சுரம்பூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி, ஜெபித்து வந்தேன். சகோ. திலீப், சபரா, கஸ்மை ரைடா, கிஷோர் மண்டல் ஆகியோருக்கு சோரா மொழியில் வெளியிடப்பட்ட பாடல் புத்தகத்தை விநியோகித்தேன். சிறுவர் வேதாகமத்திலுள்ள சில பிழைகள் திருத்தப்படவும், அதன்பின்பு அச்சிடும்பணி ஆரம்பிக்கப்படவும், என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. அல்டாப் ஹுசைன்*
*மொழி : டிங்கால்*
*பணித்தளம் : டோங்க் (ராஜஸ்தான்)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் எபிரேயர் புத்தகம் அதிகாரம் 4 : 1-ஆம் வசனம் முதல் அதி. 13 : 25-ஆம் வசனம் வரையிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. மேலும் யாக்கோபு புத்தகத்தின் அறிமுகம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

மே மாதத்தில் IBT லோகோஸ் முகாமில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு எல்லாவித ஏற்பாடுகளும் மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டிருந்தது. அதேபோல் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக இருந்தது. எங்கள் அனைவரின் வழிப்பயணத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. சம்பத்குமார்*
*பணித்தளம் : தாமன்ஜோடி (ஒடிஷா)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பெரிதான கிருபையாலும் ஆவியானவரின் வழிநடத்துதலினாலும் என் மிஷனெரிப் பணிக்காக சர்கன், திக்ரி, அம்புகம், ஜெய்ப்பூர், லூலா, சிமிலி குடா, பொடநர்கா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி, கைப்பிரதிகள் 150 மற்றும் நற்செய்தி புத்தகங்கள் 50 விநியோகம் செய்தேன். சகோ. ஆனந், சுரந்தரா, மகேந்திரா, சங்கர் சீயோன், மோஹன் ரஞ்சித், ராஜேஷ், முனா, ஜோயல் போன்றவர்கள் மிகவும் ஆவலுடன் செய்தியைக் கேட்டார்கள்.

ஞாயிறு ஆராதனை உபவாச ஜெபக்கூட்டம், வீட்டு ஜெபக்கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப் படுகின்றன. என் மிஷனெரிப் பணி விரிவடையவும், புதிய ஆத்துமாக்கள் அதிக அளவில் கிடைக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. ரூபன் மிர்கான்*
*பணித்தளம் : கட்டேல்பாரா (சட்டிஷ்கார்)*

கர்த்தரின் பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மே மாதம் 2-ஆம் தேதியிலிருந்து IBT ஊழியத்தில் மிஷனெரியாகப் பணிபுரிகிறேன். குடுக் மொழியின் மொழிபெயர்ப்பாளர் சகோ. சோபத்ராமின் உதவி, ஆலோசனையின்படி மிஷனெரிப் பணியை ஜெபத்துடனும், அர்ப்பணிப்புடனும் செய்துவர கர்த்தர் அருள்புரிகிறார். குடுக் மற்றும் சட்டிஷ்காரி மொழிகளை, சகோதரி கசும் அவர்கள் உதவியோடு கற்று வருகிறேன். இங்குள்ள B.C.I. சபைக்குச் சென்று, அங்குள்ள பாஸ்டர் பைரம் வேக்-ஐ சந்தித்து, அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

திரு. தில்மன் லக்ரா என்பவரின் மகளுக்கு அன்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கேடமா என்ற கிராமத்தில் வீட்டு ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும் மிஷனெரிப் பணிக்காக கேடமா, புத்திக்கூட்டன், தெட்டாரியாமா மற்றும் கட்டர்பாரா ஆகிய கிராமங்களுக்குச் சென்று சகோ. சுனில் லக்ரா, தேஜ்ரம் மற்றும் சுமன் கல்கா என்பவர்களைச் சந்தித்து நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டதோடு இவர்களோடு இணைந்து ஜெபக்குழுவாக பல காரியங்களுக்காக ஜெபித்து வருகிறோம். என் மனைவி ரூட்டாமணி, மகள் சக்காரிக்கா மிர்கான் இருவரின் உடல் பலவீனம் மாறவும், உறவினர் செபாத்தி மிர்கானின் கை, கால் வேதனைகள் மாறவும், என் மிஷனெரிப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. கிறிஸ்துதான் நம்ரசில்*
*மொழி : தெஷியா*
***பணித்தளம் : பொண்டுகுடா (ஒடிஷா)***

கர்த்தரின் நாமம் துதிக்கப்படுவதாக!

மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியில் எண்ணாகமம் அதிகாரம் 1 முதல் அதி. 13 வரை சரிபார்ப்புப் பணி செய்யப்பட்டது.

மிஷனெரிப் பணிக்காக பொண்டுகுடா, போர்ஜா சாஹி, மாலி சாஹி ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, ஜெபித்து வந்தேன். 14 நபர்கள் வெளிப்படையாக ஆண்டவரை ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள். இது தவிர ஞாயிறு ஆராதனை பொண்டுகுடா ஆலயத்தில் நடத்தப் பட்டது. மே மாதம் தமிழ்நாடு ஆனைகட்டியில் நடைபெற்ற லோகோஸ் முகாமில் கலந்து கொண்டேன். என் தாய்மொழி தெஷியாவில் முழு வேதாகமம் கொடுக்கப்படுவதற்காக பழைய ஏற்பாடு சரிபார்ப்புப் பணியை துரிதமாகச் செய்து வருகிறேன். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# வேதத்தின் மகிமை

- ★ *கர்த்தருடைய **வேதத்தின்படி** நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.*
- ★ *உமது **வேதத்தின்** அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்.*
- ★ *உமது **வேதம்** என் மன மகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்.*
- ★ *உமது **வேதத்தில்** நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்.*
- ★ *எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது **வேதத்தைப்** பற்றிக் கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக் கொள்ளுவேன்.*
- ★ *வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது **வேதத்தில்** பிரியப்படுகிறேன்.*
- ★ *உம்முடைய **வேதத்தை** நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.*
- ★ *கர்த்தாவே உம்முடைய இரட்சிப்பின் மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய **வேதம்** என் மனமகிழ்ச்சி.*
- ★ ***வேதப்பிரமாணத்தைக்** கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்;*

தொகுப்பு :
***N. ஜார்ஜ் வில்லியம்***

# நீங்கள் நினைத்தால் சாதிக்கலாம்

தமிழ் மண்ணில் வியப்பூட்டும் பணி செய்தவர்களுள் ஒருவர் ஜி.யு. போப். அறிவியல் முன்னேற்றங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் செய்ய முடியாத மாபெரும் பணிகளைச் செய்தவர் இவர். தமிழின் பெருமையை வளர்த்த தலைசிறந்த அறிஞர்.

ஒரு நாட்டின் மொழியை அறியாமல் அந்த நாட்டில் கிறிஸ்துவின் பணியைத் திறம்படச் செய்ய இயலாது என்பதை உணர்ந்து, இங்கிலாந்து நாட்டிலே தமிழ் மொழியைக் கற்கத் துவங்கினார்.

1839-ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலுள்ள சென்னை வந்தார். பின் திருநெல்வேலியில் சாயர்புரம் என்ற இடத்தை மையமாக வைத்து ஊழியங்களை ஆரம்பித்தார். எபிரேயம், கிரேக்கு, லத்தீன், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளையும் திறம்படக் கற்றார்.

தமிழ்நாட்டு கிறிஸ்தவ மக்களுக்காக சாயர்புரத்தில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவினார். இவரின் இடைவிடாத உழைப்பால் 96 ஊர்களில் சபைகள் ஏற்பட்டன. ஞானஸ்நானத்-திற்காக ஆயிரத்து நூறு மக்கள் தயாராயினர். அக்கம் பக்கத்து கிராமங்களில் பாடசாலைகள் கட்டப்பட்டன.

நாட்டு மக்களுக்கு மாபெரும் பணிகளைச் செய்தபோதிலும் பல இன்னல்கள் ஏற்பட்டன. சில ஊர்களில் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட வில்லை. ஒருமுறை அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு பெண் மாட்டு சாணத்தைக் கரைத்து அவர்மேல் ஊற்றினார். அத்தனை பாடுகளையும் கிறிஸ்துவின் பேரில் உள்ள விசுவாசத்தாலும், மக்கள் அவ்வன்பைக் கண்டு கொள்ளவும் தாங்கிக் கொண்டார்.

தமிழ் மொழியில் ஏராளமான நூல்களை எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தன் வாழ்நாள் முழுவதும் போதகராகப் பணியாற்றிய இவர் பிப்ரவரி 11-ஆம் நாள் தமது 88-ஆம் வயதில் விண்ணிற்குச் சென்றார்.


அன்பரே! கிறிஸ்துவுக்குள் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் உள்ளதா?

*வாழ்விலிருந்து வாழ்வுக்கு :* நல்லொழுக்கமுள்ளவனே உயர்ந்த நிலைகளில் உயர முடியும் - ஆஸ்வால்டு சேன்டர்ஸ்

*குயவனின் கரங்களில் :* ஆண்டவரே! உம்மை அறியா மக்களுக்கு உந்தன் செய்தி கூற தந்தேன் என்னை உம் கைகளில்.

*தியானத்திற்கு :* யாத். 21, சங். 74, மாற்கு 7.

**G.U. போப்**



**1820-1908**

| | | |
|---|---|---|
| *மண்ணில்* | : | *24.04.1820* |
| *விண்ணில்* | : | *11.02.1908* |
| *ஊர்* | : | *பிரின்ஸ் எட்வர்ட் தீவு* |
| *நாடு* | : | *நோவா ஸ்காட்டியா* |
| *தரிசன பூமி* | : | *இந்தியா* |

- *"மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்"* என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் - செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## உலகச் செய்திகள்

(9-ஆம் பக்க தொடர்ச்சி)

★ பொது அறிவு : கொல்கத்தா நகரில் மிஷனரீஸ் ஆஃப் சாரிட்டி என்ற சேவை அமைப்பு மூலம் 40 ஆண்டுகளாக ஏழைகள், தொழுநோயாளிகளுக்கு சேவையாற்றிய அன்னை தெரசா 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதி மறைந்தார். அவரது மறைவிற்குப் பிறகு 2 முறை அற்புதங்களை நிகழ்த்தியதாக கடந்த 2003-இல் அப்போதைய போப் ஜான்பால், அன்னை தெரசாவுக்கு 'அருளாளர் பட்டம்' அளித்தார். அதைத் தொடர்ந்து 2016, செப்டம்பர் 4-இல் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

★ தமிழகம் கென்னானூரில் 4 ஆயிரம் ஆண்டு பழமையான புதிய கற்கால வெட்டுக்கருவி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டது. தொல்லியல் துறை அகழாய்வு இயக்குநர் தகவல்.

★ 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்திய அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்க அணியை வீழ்த்தி 2-வது முறையாக உலக சாம்பியன் பட்டத்தை வென்றது.

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. மே மாதத்தில் நடைபெற்ற IBT லோகோஸ் முகாமில் சென்னையிலிருந்தும், பிற பகுதிகளிலிருந்தும் அதிகமான வாலிபர்கள் கலந்து கொண்டு உற்சாகமாக Volenteers-ஆகவும், நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றதற்காக கர்த்தரைத் துதிப்போம். இவர்கள் கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணிக்கவும், அவர் பணிக்கென்று ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளவும், IBT ஊழியப் பணியிலும் தொடர்ந்து இணைந்து கொள்ளும் மனதை தேவன் அருளச் செய்ய ஜெபிப்போம்.

2. அச்சிடப்பட்ட 1000 படுகா வேதாகமப் புத்தகத்தில் இதுவரை அலுவலகத்திலிருந்து 950 வேதாகமங்கள் ஊட்டி, கோத்தகிரி, மேட்டுப்பாளையம் மற்றும் கோவையிலுள்ள படுகா சபைகளுக்கும், படுகா மொழிபெயர்ப்பாளர்கள், கோத்தகிரி முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் IBT அலுவலகத்திலிருந்தும் விநியோகிக்கப்-பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். வேதாகமத்தை வாங்கியவர்கள் அனுதினமும் வாசித்து, தியானித்து கர்த்தருக்குள் நிலைத்து சாட்சியாக வாழ ஜெபியுங்கள்.

3. சில வேதாகமப் புத்தகங்கள் அச்சிடுவதற்காக செலவுகளை ஏற்ற இரண்டு Sponsor-களே ஊழியத்தின் அவசியத் தேவையான 3 இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கும் உதவ முன் வந்ததற்காக, இப்படி கர்த்தரின் நாமம் மகிமைப்பட, பல வழிகளில் உதவி செய்யும் மனதையுடைய Sponsor-களை கர்த்தர் IBT ஊழியத்திற்குக் கொடுத்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இக்குடும்பங்களைக் கர்த்தர் வர்த்திக்கச் செய்யவும், அவர்களின் மனவேண்டுதல்கள், விண்ணப்பங்களுக்கு கர்த்தர் பதில் தந்து, சகலவித நன்மை-களினாலும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

4. ஆரம்பகாலத்தில் IBT ஊழியத்தில் இணைந்த பிரதிநிதிகள் பலர் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்கள். இவர்களின் இடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கிறது. பல ஊர்களுக்கு பிரதிநிதிகள் இல்லாத நிலையே உள்ளது. இளைஞர்கள், நடுத்தர வயதுடைய, ஊழிய பாரமுள்ளவர்கள் பிரதிநிதிகளாக இணைய ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibt1.com


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.




## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd August 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**